இணைப்பு

[338-ம் பக்கத்தில் 175-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

பன்முறை சாகுபடித் திட்டம் ஓர் அனைத்திந்திய திட்டமாகத் தமிழ் நாட்டில் 1967–68-ம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. 1967–68-ல் 2.15 லட்சம் ஏக்கர்களிலும், 1968–69-ல் 5.53 லட்சம் ஏக்கர்களிலும், 1969–70-ல் 9.95 லட்சம் ஏக்கர்களிலும் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. 1970–71-ல் 12.99 லட்சம் ஏக்கர்களில் செயல்படுத்தப்பட்டது.

மாவட்ட தீவிர சாகுபடித் திட்டம் செயல்பட்டுவரும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும், பகுதி தீவிர வேளாண்மைத் திட்டம் செயல்பட்டுவரும் திருச்சி மாவட்டத்தில் முசிரியிலும், சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டுவரும் தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரிலும், பன்முறை சாகுபடி முன்னோடித் திட்டம் செயல்படுத்த இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டம் மத்திய அரசுத் திட்டமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பன்முறை சாகுபடித் திட்டத்தை விரைவாக மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கம். பயிர் வள ஆராய்ச்சி குறித்து ஒருங்கிணைந்த செயல் திட்டம் அமைத்தல், அறிவியல் செயல்முறை விளக்கங்கள், நன்கமைந்த வளர்ச்சி நடவடிக்கைகள், சீரான அளவில் பயிரிடு தேவைப் பொருட்கள், கடன் வசதிகள், முறையாக ஏற்படுத்தப்பட்ட விற்பனை வசதிகள், மேற்கண்டவற்றிற்குத் துணையாக உள்ள நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக பன்முறை சாகுபடித் திட்டம் விரிவுபடுத்தப்படும். ஒவ்வொரு பகுதியிலும் ஒரு லட்சம் ஏக்கர்களில் இத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காகும் செலவு முழுவதும் மத்திய அரசினால் ஏற்கப்படும்.

கீழே குறிப்பிட்டுள்ளபடி மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 12 லட்சம் மத்திய அரசினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது :—

		ரூ.
1971–72	..	3,93,000
1972–73	..	4,01,000
1973–74	..	4,09,000
(அல்லது ரூ. 12 லட்சம் மட்டில்)		12,03,000

The Multiple Cropping Programme was introduced in Tamil Nadu as an All-India Scheme during the year 1967-68. As against the achievement of 2.15 lakh acres during 1967–68 and 5.53 lakh acres during 1968–69, an area of 9.95 lakh acres was covered during 1969–70. The achievement in 1970–71 is 12.99 lakh acres.

The Government of India have since sanctioned a Pilot Project on Multiple Cropping in Tamil Nadu as a Centrally-Sponsored Scheme for implementation in the following three Agricul-

tural Divisions representing Intensive Agricultural District Programme Scheme, Intensive Agricultural Area Programme Scheme and Small Farmers Development Scheme areas :—

1. Pudukkottai .. Thanjavur district
2. Musiri .. Tiruchirappalli district.
3. Cuddalore .. South Arcot district.

The objective of the project is to accelerate the development of Multiple Cropping in selected areas through establishment of an integrated action programme of adaptive research trails, scientific demonstrations, well organised extension efforts, streamlined inputs supplies and credit facilities and organised marketing and allied activities. The programme will be implemented in an area of one lakh acres in each division. The entire expenditure on the scheme will be borne by the Government of India and they have sanctioned a sum of Rs. 12.00 lakhs for three years as indicated below :—

		(RUPEES IN LAKHS)
1971–72	.. ..	3·93
1972–73	.. ..	4·01
1973–74	.. ..	4·09
	(12·00 roundly).	12·03

இணைப்பு—2.

[66ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1. கல்விச் செலவினமும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

ஒரு நாட்டின் பல்வளப் பொருளாதார முன்னேற்றத்திற்கு கல்வி வளர்ச்சி இன்றியமையாததாகும். கல்விக்காகச் செய்யும் முதலீடு நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளமான வாழ்விற்கும் செய்யப்படுகிற மிகச் சிறந்த முதலீடாகும். தமிழ் நாடு அரசு இதை முற்றிலும் உணர்ந்து, எல்லா நிலைகளிலும் அளவிலும் தரத்திலும் கல்வி வளர்ச்சி பெற்றிட இடைவிடாது பாடுபட்டு வருகிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்கும் கல்வி வாய்ப்புகளை நல்கும் முயற்சியில், பள்ளி நிலையிலும், கல்லூரியில் புகுமுக வகுப்பு நிலையிலும், தொழில் நுட்பப் புகுமுக வகுப்பு நிலையிலும் இலவசக் கல்வி செயற்படுத்தப்பட்டுள்ளது. 1959–60-ல் வருவாய்க் கணக்கிலான கல்விச் செலவு ரூ. 15.15 கோடியாயிருந்ததற்கு மாறாக, 1971–72 திருத்திய வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 81.84 கோடிக்கு உயர்ந்துள்ளது. 1971–72 ஆம் ஆண்டிற்கான கல்வி வரவு–செலவுத் திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள பணிகளைப் பேணி வரவும், அப்பணிகளை மேலும் விரிவுபடுத்தி வளர்க்கவும் வகை செய்கிறது.

2. கல்வி வளர்ச்சியில் தனியார் பங்கும் பொறுப்பும் சிறப்பானவை. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலமாக சமுதாயத்தினரிடமிருந்து நிதி முதலிய பலவகை உதவிகளைத் திரட்டுதல்,